அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

44 T I

முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020

## First Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : ........................

இஸ்லாம் I
Islam I

காலம் : 2 மணி

**அறிவுறுத்தல்கள் :**
**1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 1, 2, 3, 4, 5 என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டுக.**

01. "இஸ்லாம் ஒரே சமயத்தில் அதன் தனித்துவத்தை பாதுகாக்கும் போதனைகளையும் கால சூழலுக்கேற்ற கொள்கைகளையும் வகுக்கக் கூடிய வழிமுறைகளையும் கொண்ட மார்க்கமாகும்." இதனூடாக முன்வைக்கப்படும் இஸ்லாத்தின் சிறப்பம்சமானது,
1) பொதுமைப்படுத்தப்பட்ட மார்க்கம். 2) வஹியின் அடிப்படையில் அமைந்த மார்க்கம்
3) நடுநிலை பேணும் மார்க்கம் 3) நெகிழும்,நெகிழாத தன்மைகள் கொண்ட மார்க்கம்
5) சம்பூரண வாழ்க்கைத் திட்டம் அமைந்த மார்க்கம்.

02. நபி (ஸல்) அவர்களுக்கு பின்னர் தோன்றிய போலி நபிமார்களில் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவன்.
1) முஸைலமா 2) மிர்சா குலாம் அஹ்மத் 3) அஸ்வத்
4) துலைஹா 5) ஸஜா

03. நபிமார்களில் தன்னுடைய "கலீல்" என அல்லாஹ் குர்ஆனில் பெயர் குறிப்பிடும் நபி.
1) நூஹ் (அலை) 2) மூஸா (அலை) 3) முஹம்மத் (ஸல்)
4) ஈஸா (அலை) 5) இப்ராஹிம் (அலை)

04. "லிவாஉல் ஹம்து" எனப்படுவது,
1) மறுமையில் சுவனவாசிகளுக்கான உணவு. 2) மஹ்ஸர் மைதானத்தில் மனிதர்களின் நிலை.
3) நரகவாசிகளுக்கான தண்டனை 4) மறுமையில் நிழல் தரும் கொடி
5) அர்ஷினை சுமந்த மலக்குமார்களின் அணி

05. "படைப்பாளனுக்கும் படைப்புகளுக்கும் இடையில் வேறுபாடுகள் எதுவும் கிடையாது" என்ற சிந்தனையை முன்வைக்கும் கோட்பாடு.
1) கதரிய்யா 2) ஜபரிய்யா 3) வஹ்ததுல் வுஜூத் 4) மு∴தஸிலா 5) பாதினியா

06. "மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி" என்ற கருத்தில் வெளியாகும் இஜ்மா
1) இஜ்மா ஸரீஹ் 2) இஜ்மா ஸுகூதி 3) இஜ்மா அக்ஸரிய்யா
4) இஜ்மா முரக்கப் 5) இஜ்மா கௌலி

07. ஒரு ஹதீஸின் தொடரில் ஸஹாபியை விட்டுவிட்டு ஒரு தாபிஈ நேரடியாக நபி (ஸல்) அவர்களிடம் இருந்து அறிவிக்கும் ஹதீஸ்.
1) முஅல்லக் 2) முன்கதி∴ 3) மு∴தல் 4) முர்ஸல் 5) ஆஹாத்

08. "அதற்குச் சுவையுண்டு. அது ஓதப்பட வேண்டியது. அதன் மேற்புறம் காய்த்து கனி தரக்கூடியது. கீழ்ப்புறம் ஆழமாக வேரூன்றியது." என குர்ஆனை புகழ்ந்துரைத்தவர்.
1) உத்பா பின் ஆமிர் 2) உமர் இப்னு கத்தாப் 3) அபூ ஜஹ்ல்
4) அபூ சுபியான் 5) வலீத் பின் முகீரா



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

09. அலி (ரலி) அவர்களை கொலை செய்த அப்துல்லாஹ் இப்னு முல்ஜிம் என்பவனை நேசிக்கும் ஷீயாப் பிரிவினர்.
1) நுஸைரிகள் 2) இமாமிய்யா 3) இஸ்மாலிய்யா
4) பாதினி 5) ஸைதிகள்

10. கழாகத்ர் மனிதனில் எவ்வித தாக்கமும் ஏற்படுத்தாது. மனிதனின் செயற்பாடுகளை அவனே தீர்மானிக்கின்றான் என்ற கோட்பாட்டையுடையோர்.
1) ஜஹ்மிய்யா 2) முர்ஜிய்யா 3) அஹ்லுஸ்ஸுன்னா
4) கதரிய்யா 5) ஜபரிய்யா

11. ஸஹீபா, ஸாதிகா எனப்படும் ஹதீஸ் திரட்டு யாருடையது?
1) அலி இப்னு அபீதாலிப் (ரலி) 2) அபூஹுரைரா (ரலி)
3) அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (ரலி) 4) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி)
5) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி)

12. அல் முதவ்வனா என்பவை எவ் இமாமுக்குரியதாகும்.
1) இமாம் ஷாபிஈ 2) இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் 3) இமாம் மாலிக்
4) இமாம் அபூஹனிபா 5) இமாம் திர்மிதி

13. பிக்ஹ் கலை தேக்கமும், வீழ்ச்சியும் அடைந்த காலம்
1) ஹிஜ்ரி 1 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதி
2) ஹிஜ்ரி 4 ஆம் நூற்றாண்டின் மத்தி தொடக்கம் 7 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை
3) ஹிஜ்ரி 2 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் 4 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை
4) ஹிஜ்ரி 7 ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை
5) ஹிஜ்ரி 1286 முதல் இன்று வரை

14. “அஸ்ல்” ஐ விடவும் “பர்உ” விலுள்ள இல்லத்தின் பெறுமானம் குறைவானதாக இருக்கும் கியாஸ்.
1) கியாஸுல் அத்னா 2) கியாஸுல் முஸாவி 3) கியாஸுல் அவ்லா
4) கியாஸுல் ஜலீஃ. 5) கியாஸுல் மஃனா

15. “உறுதியாக நிறுவப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட ஒரு விடயத்தைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்திருத்தல்” என்பது,
1) இஸ்திஹ்ஸான் 2) இஸ்திஸ்ஹாப் 3) இஸ்திஸ்லாஹ்
4) இஹ்ஸான் 5) ஸரஉஸ் ஸாபிகா

16. மகாஸிதுஸ் ஷரீஆ என்பது சட்டத்தை உருவாக்கியவன் அதனூடாக நாடிய நலன்கள் என்ற வரைவிலக்கணத்தை முன் வைத்தவர்.
1) அல் பாஸி 2) அஹ்மட் அர்ரைஸுனி 3) முஸ்தபா இப்னு கராமா
4) நூர்தீன் அல் காதிமி 5) முஹம்மத் இப்னு ஸஹ்த்

17. அஸ்மாஉல் ஹுஸ்னாவில் ஒன்றான “அர்ரஸ்ஸாக்” என்பதன் பொருள்.
1) அளவற்ற அருளாளன் 2) அபயம் அளிப்பவன் 3) சாந்தி அளிப்பவன்
4) பொறுமையாளன் 5) உணவு வழங்குபவன்

18. நஜ்த் பாரசீகக் குடா வழியாக ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்வோரின் மீகாத்,
1) அல் ஜுஹ்பா 2) துல்ஹுலைபா 3) தாதுல் இராக்
4) கர்னுல் மனாசில் 5) யலம்லம்

19. முஃதஸிலா சிந்தனையை வஹி, பகுத்தறிவின் அடிப்படையில் விமர்சித்தவர்.
1) ஹஸனுல் பஸரி 2) அபூ மூஸா அல் அஷ்அரி 3) அபுல் ஹஸன் அல் அஷ்அரி
4) அஹ்மத் இப்னு ஹன்பல் 5) வாஸில் பின் அதா

20) ஒருவரது கையிருப்பில் ரூபா 1 500 000 பணம் இருக்கின்றது. அவர் செலுத்த வேண்டிய கடன் ரூபா 250 000. அவ்வருடத்தின் ஸகாதின் நிஸாப் ரூபா 1 050 000 எனின், அவர் செலுத்த வேண்டிய ஸகாத்தின் அளவு
1) ரூ 25 000 2) ரூ 31 250 3) ரூ 33 000 4) ரூ 27 250 5) ரூ 30 250


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

21) உஸ்மான் (ரலி) அவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டவன்,
1) அப்துல்லாஹ் இப்னு அம்ர்
2) அப்துல்லாஹ் இப்னு வஹ்ப்
3) அப்துல்லாஹ் இப்னு உபை
4) அப்துர்ரஹ்மான் இப்னு முல்ஜிம்
5) அப்துல்லாஹ் இப்னு ஸபா

22) பின்வரும் விடயங்களில் கவாரிஜ்களின் கொள்கைகளுள் ஒன்று,
1) மறுமையில் அல்லாஹ்வைக் காண முடியும் என்பதை மறுத்தல்.
2) பெரும் பாவம் செய்தவர் எவரும் நபியவர்களின் ஷபாஅத்தைப் பெற முடியாது.
3) உலகம் நன்மை, தீமை பற்றியோ கழாகத்ர் பற்றியோ பேசும் இடமல்ல.
4) பெரும் பாவம் செய்யும் மு∴மீன் ஈமானை இழக்கமாட்டான்.
5) ஈமானுடன் செய்யும் பெரும்பாவம் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை.

23) சூரத்துல் பாத்திஹாவின் சிறப்புப் பெயர்கள்
A - ஸுலூஸுல் குர்ஆன்
B - ஸப்உல் மதானி
C - சூரதுல் ஸலாத்
D - சூரதுல் ஷிபா
E - ஸீரதுல் ஹம்து
1) BCDE 2) CDEA 3) ABCD 4) ABCE 5) ABDE

24) ஆசிரியர்களையும், மாணவர்களையும் காட்டும் சரியான விடைத் தொகுதி,
A - அபூ ஹனிபா (றஹ்) - மாலிக் (றஹ்)
B - ஷாபி (றஹ்) - அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்)
C - மாலிக் (றஹ்) - ஷாபி (றஹ்)
D - ஷாபி (றஹ்) - மாலிக் (றஹ்)
E - அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்) - புகாரி (றஹ்)
1) ABCE 2) ACDE 3) BCDE 4) ABDE 5) ABCD

25) பின்வரும் கூற்றுக்களை நோக்குக.
A - அல்லாஹ்வே இவ்வுலகைப் பரிபாலிப்பவன்.
B - அவ்லியாக்கள் எம்மை இறையன்புக்குரியவர்களாக மாற்றுவர்.
C - வணங்குவதற்கும், வழிபடுவதற்கும் தகுதியானவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே.
D - எமது தேவைகளை அஸ்மாஉல் ஹுஸ்னாவைப் பயன்படுத்தி அல்லாஹ்விடம் கேட்க முடியும்.
E - தாயத்துக்கள் எமது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்கின்றன.
இவற்றுள் அல்லாஹ்வை விசுவாசித்தலுடன் தொடர்பான மிகச்சரியான கூற்றுக்களை இணங்காண்க.
1) CAB 2) EDC 3) BCD 4) EAB 5) ACD

26. உம்ரா தொடர்பான சரியான கூற்றுக்கள்.
A - தவாப் உண்டு.
B - ஸ∴யு செய்தல்.
C - அரபாவில் தரிக்க வேண்டும்.
D - மினாவில் தங்க தேவையில்லை.
E - எந்த மாதத்திலும் நிறைவேற்றலாம்
1) CAB 2) EDC 3) BCD 4) ABE 5) ACD

27. சுன்னத்தான நோன்பு நோற்கப்படும் நாட்களின் தொகுதி
A - திங்கள், வியாழன்
B - அய்யாமுத் தஷ்ரீக்
C - அரபா தினம்
D - பிறை 13, 14, 15
E - ஷவ்வால் ஆறு தினங்கள்
1) ABDE 2) ACDE 3) ABCE 4) ABCD 5) BCDE

28. வஹ்ததுல் வுஜூத் என்ற சிந்தனையை முன்வைத்த அறிஞர்கள்
A - மூஸா காலிம்
B - இப்னு ஸபிய்யீன்
C - இப்னு அரபி
D - தஸ்மலானி
E - இப்னுல் பாரிஸ்
F - அப்துல்லாஹ் பின் ஸபா
1) ABCD 2) ACDE 3) BCDF 4) BCDE 5) CDEF

NWP - EXAM


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

29. மனிதன் நிறைவேற்றவேண்டிய இபாதத், இமாரத், கிலாபத் பணிகள் சில வருமாறு.

A - மனித உரிமைகளைப் பாதுகாத்தல். B - இறை சட்டங்களை மேலாக மதித்தல்.

C - நாட்டுக்கு விசுவாசமாக நடத்தல். D - இயற்கை வளங்களை பாதுகாத்தல்.

E - மார்க்கக் கடமைகளை நிறைவேற்றல்.

இவற்றுள் கிலாபத் பணியுடன் தொடர்புடையவை

1) ABC 2) BCD 3) CDE 4) ACD 5) BDE

30. A - இறுதி நபித்துவத்தின் முரண்பட்டவர்கள்.

B - அல்லாஹ்வுக்கு உருவம் உண்டு என வாதிட்டவர்கள்.

C - இந்தியாவில் தோற்றம் பெற்றவர்கள்.

D - அல் குர்ஆன் படைக்கப்பட்டது என வாதிட்டவர்கள்.

E - மிர்ஸா குலாம் அஹ்மத் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

மேலுள்ள கூற்றுக்களில் காதியானிகளுடன் தொடர்புபட்டவைகள்

1) BCE 2) EAC 3) CDB 4) ACE 5) ADB

31 தொடக்கம் 35 வரையிலான வினாக்களில் X நிழலில் உள்ளவை Y நிழலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. அவற்றைத் தொடர்புபடுத்தும் போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தை தெரிவு செய்க.

31.

| X | Y |
|---|---|
| 1) அம்ர் இப்னு ஹிஷாம் | A - கர்பலா யுத்தம் |
| 2) ஹம்ஸா (ரலி) | B - பத்ர் யுத்தம் |
| 3) முஸைலமா | C - உஹத் யுத்தம் |
| 4) ஹுஸைன் (ரலி) | D - யமாமா யுத்தம் |
| 5) தல்ஹா (ரலி) | E - ஜமல் யுத்தம் |

1) BDCAE 2) BCDAE 3) BDCEA 4) BCDEA 5) ABCDE

32.

| X | Y |
|---|---|
| 1) அஷரத்துல் முபஷ்ஷரா | A - அபூபக்கர் (ரலி) |
| 2) உம்மஹாத்துல் முஃமினீன் | B - ஆயிஷா (ரலி) |
| 3) அஸ்ஹாபுல் ஸுப்பா | C - அபூஹுரைரா (ரலி) |
| 4) முஹாஜிரீன்கள் | D - முஸ்அப் இப்னு உமைர் (ரலி) |
| 5) அன்சாரிகள் | E - அபூஅய்யூப் அல் அன்சாரி (ரலி) |

1) ABDCE 2) ABCED 3) BACDE 4) DBCAE 5) ABCDE

33.

| X | Y |
|---|---|
| 1) குர்ஆன் | A - மரபு |
| 2) கியாஸ் | B - வஹீ மத்லுவ் |
| 3) ஹதீஸ் | C - தோழமை |
| 4) உர்ப் | D - கைறு மத்லுவ் |
| 5) இஸ்திஸ்ஹாப் | E - இல்லத் |

1) DEBAC 2) BEDAC 3) ABCDE 4) BDACE 5) EDCBA

34.

| X | Y |
|---|---|
| 1) கியாஸ் முஸாவீ | A - மேலானது |
| 2) கியாஸுல் அவ்லா | B - அடிப்படை |
| 3) கியாஸுல் அத்னா | C - பொதுத்தன்மை |
| 4) அஸ்ல் | D - குறைந்த தன்மையுடையது. |
| 5) இல்லத் | E - சம தன்மை வாய்ந்தது. |

1) EADBC 2) CEABD 3) DEBCA 4) CEBAD 5) CBEDA



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP - EXAM

35. X / Y

| X | Y |
|---|---|
| 1) இஸ்திஹ்சான் | A - சமூக நலன் |
| 2) இஸ்திஸ்லாஹ் | B - இணைந்து செல்லல் |
| 3) உர்பு | C - முன்னைய ஷரிஅத்துகள் |
| 4) இஸ்திஸ்ஹாப் | D - அழகானது எனக் காணுதல் |
| 5) ஷரஉ_ஸ்ஸாபிகா | E - வழக்காறு |

1) CEDBA 2) CEABD 3) DEBCA 4) DAEBC 5) CBEDA

- **36 தொடக்கம் 40 வரை உள்ள வினாக்களில் உள்ள சொற்களில் இரண்டு சொற்கள் மற்றிரு சொற்களுடன் ஏதாவது ஒருவகையில் தொடர்பினைக் கொண்டுள்ளன. அவ்வாறான தொடர்பினைக் கொண்டிராத எஞ்சிய சொல்லைத் தெரிவு செய்க.**

36. 1) அஸர் 2) ளுஹர் 3) வித்ர் 4) லுஹா 5) குஸுபைன்

37. 1) ஸகரிய்யா 2) நூஹ் 3) ஹாரூன் 4) யஹ்யா 5) மூஸா

38. 1) முஅல்லபதுல் குலூப் 2) ஹஜ் 3) உம்ரா 4) அறபா 5) ஸக்காத்

39. 1) அறபா 2) ஸபா 3) மர்வா 4) ஹஜ்ருல் அஸ்வத் 5) ருக்னுல் யமானி

40. 1) முஜ்தஹித் 2) முஹத்திஸ் 3) அபூஹனீபா 4) திர்மிதி 5) அத்தபரி

- **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுக்கு பின்வரும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகப் பொருத்தமான ஜோடியை தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.**

| இல | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது. |

| முதலம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 41. ஷீயாக்களில் ஸைதிகள் ஒப்பீட்டு ரீதியில் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்திற்கு நெருக்கமானவர்கள். | தகிய்யா என்பது ஷீயாக்களின் ஒரு நிலைப்பாடாகும். (……..) |
| 42. ஹதீஸ் மத்ன் பற்றி ஆராய்வது அஸ்மாஉர் ரிஜால் எனப்படும். | ஹதீஸ்களை புனைந்துரைப்பதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டோர் கவாரிஜ்கள் ஆவர். (……..) |
| 43. மனித வரலாற்றில் இறைவன் இருக்கின்றான் என்பதை மறுத்தவர்களே பெரும்பான்மையினர். | பிரபஞ்சத்தில் காணப்படும் அத்தாட்சிகள் இறைவன் இருக்கின்றான் என்பதற்குச் சிறந்த சான்றாகும். (……..) |
| 44. மதனிய்யா சூராக்களில் சமூக மட்டத்திலான போதனைகள் வழங்கப்பட்டன. | சமூக, அரசியல், பொருளாதார விடயங்கள் தொடர்பான சட்டங்கள் மதீனாவில் நடைமுறைப்படுத்தப்பட்டன. (……..) |
| 45. ஜஸீரதுல் அரப் இலங்கைக்கு வடமேற்கில் உள்ளது. | அரபிகள் இலங்கையை ஜஸீரதுல் யாக்கூத் என அழைத்தனர். (……..) |
| 46. ஹதீஸ் தொகுப்புகளின் அமைப்பிலும், உள்ளடக்கத்திலும் ஏற்பட்ட வேறுபாடுகளினால் வித்தியாசமான ஹதீஸ் தொகுப்புக்கள் தோன்றின. | முஸ்னத், ஜாமிஉ, முஸன்னப், ரிஸாலா, ஸுனன் என்பன ஹதீஸ் தொகுப்புக்கள் ஆகும். (……..) |
| 47. கிரான் என்பது நோன்புடன் தொடர்புபட்ட ஒரு பதமாகும். | அய்யாமுத் தஷ்ரீக் உடைய நாட்கள் பிறை 13, 14, 15 ஆகும். (……..) |
| 48. மடையன் கூறும் வக்பை ஏற்க முடியும் என்ற முடிவு இஸ்திஹ்ஸான் மூலம் பெறப்பட்டதாகும். | மடையன் கூறும் வக்பை ஏற்க முடியும் என்ற உதாரணத்தை இஸ்திஹ்ஸான் மஸ்லகியிற்கு குறிப்பிட முடியாது. (……..) |
| 49. "அந்நஜ்தாத்" என்ற குழு மு‥தஸிலாக்களது ஒரு உட்பிரிவு ஆகும். | ஹுதைலிய்யா என்ற குழு கவாரிஜ்களது ஒரு உட்பிரிவு ஆகும். (……..) |
| 50. இமாம் திர்மிதி (ரஹ்) அவர்கள் இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் மாணவர் ஆவார். | இமாம் திர்மிதி (ரஹ்) அவர்கள் இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களின் மாணவர் ஆவார். (……..) |



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP - EXAM

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

44 T II

முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020
First Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : ......................

இஸ்லாம் II
Islam II

காலம் : 3 மணி

- பகுதி i இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி ii இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளி உரித்தாகும்

## பகுதி – I

(01) 1) இபாதத் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2) மனித வாழ்வின் அனைத்து செயல்பாடுகளும் இபாதத்தாக அமைவதற்கு அவசியமான நிபந்தனைகள் நான்கினை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3) ஸகாத் கொடுக்கும் தனி மனிதனிடம் ஸகாத் ஏற்படுத்தும் தாக்கங்கள் நான்கினை குறிப்பிட்டு இரண்டினை விளக்குக. (6 புள்ளிகள்)

4) இபாதத்களுக்கும் அஹ்லாக்கிற்கும் இடையிலான தொடர்பினை அல்குர்ஆன், சுன்னா ஆதாரங்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

(02) 1) இஜ்திஹாத் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2) இஜ்திஹாத்துக்கான அல்குர்ஆன் அஸ்ஸுன்னா ஆதாரங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3) முஜ்தஹிதுகளின் படித்தரங்கள் மூன்றினையும் குறிப்பிட்டு இரண்டினை விளக்குக. (6 புள்ளிகள்)

4) பிக்ஹ் கலை வளர்ச்சிக் கட்டங்கள் நான்கினைக் குறிப்பிட்டு இரண்டினை சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)

(03) 1) தஸவ்வுப் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2) ஆன்மீகத்தின் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3) ஆன்மிக முன்னேற்றத்திற்கான வழிமுறைகள் நான்கினைக் குறிப்பிட்டு இரண்டினை அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

4) ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக அமையும் நான்கு காரணங்களை குறிப்பிட்டு அவற்றில் இரண்டு விடயங்களை அன்றாட வாழ்வில் எவ்வாறு தவிர்த்துக் கொள்வது என்பது பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, விநியோகிக்கப்பட்டுள்ளது.

## பகுதி – II

(04) 1) இஸ்லாமிய ஷரீஆவில் கருத்து வேறுபாடு தோன்றுவதற்கான காரணங்கள் ஐந்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

2) இஸ்லாமிய ஷரீஆவில் தோன்றும் கருத்து வேறுபாடுகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் ஐந்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

(05) 1) இஸ்லாமியப் பொருளாதாரத்தின் கோட்பாடு சார்ந்த அடிப்படைகள் ஐந்தினை முன்வைத்து அவற்றை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

2) இஸ்லாமியப் பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(06) 1) அல்குர்ஆனை ஆய்வு செய்த அறிஞர்கள் முன்வைத்த அல்குர்ஆனின் அற்புதத் தன்மை நான்கினையும் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

2) மகாஷீது ஷரீஆவின் பாரம்பரிய வகைப்படுத்தலின் மூன்று படிநிலைகளையும் குறிப்பிட்டு விரிவாக விளக்குக. (10 புள்ளிகள்)

(07) 1) மு.்.தஸிலா சிந்தனைப் பிரிவின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்கி அதன் பிரதான கோட்பாடுகளையும் விரிவாக விளக்குக. (10 புள்ளிகள்)

2) ஸக்காத் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தை ஆதாரத்துடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(08) 1) பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

1- நிபாக் (நயவஞ்சகம்)

2- இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் ஹதீஸ் துறை பங்களிப்பு.

3- அஸ்பாபுந் நுஸுூல்

4- ''அல் கவாஇத் அல் பிக்ஹிய்யா''

NWP - EXAM



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)

**முதலாம் தவணைப் பரீட்சை 2020**

தரம் 13 - புள்ளியிடும் திட்டம்

**இஸ்லாம் Islam**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 4 | 4 | 1 | 1 | 1 | 5 | 5 | 2 | 2 | 3 | 2 | 4 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 4 | 1 | 3 | 3 | 3 |

| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 4 | 1 | 2 | 4 | 1 | 2 | 5 | 2 | 2 | 3 | 2 | 2 | 1 | 3 | 3 | 3 | 3 | 1 | 3 | 4 | 2 | 3 | 5 |

1) இபாதத் என்பது "அபத" எனும் வினைச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். அபத என்றால் அடிபணிதல், ஊழியம் செய்தல், பணி புரிதல், அடிமையாக இருத்தல் போன்ற கருத்துக்களைக் கொண்டுள்ளது. இஸ்லாமிய ஷரீஆவின் கண்ணோட்டத்தில் "இபாதா" என்பது இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்கின்ற ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் கட்டளைக்கு முற்றுமுழுதாக அடிபணிந்து வழிபட்டு நடப்பதாகும்.

2) i) தூய எண்ணம் (இஃக்லாஸ்)
ii) இஸ்லாமிய ஷரீஆவின் அங்கீகாரம்
iii) ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல்.
iv) அன்றாட அடிப்படை வணக்கங்களுக்கு தடையாக அமையக் கூடாது.
v) குறித்த செயற்பாட்டில் நேர்த்தி காணப்படல்

3) i. உலோபித்தனத்திலிருந்து தூய்மையடைதல்.
ii) தாராளத் தன்மையை ஏற்படுத்துகின்றது.
iii) அல்லாஹ்வின் பண்பை அணிகலனாகப் பெறல்.
iv) இறை அருளுக்கு நன்றி செலுத்தல.
v) உலக ஆசைகளிலிருந்து உள்ளத்துக்கு பாதுகாப்பளித்தல்.
vi) பிறர் நேசத்தை பெறல்
vii) செல்வந்தனின் செல்வம் விருத்தியடைதல் - (அதை விளக்கியிருந்தால் புள்ளி வழங்கவும்)

4) ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 201 - 202 பார்க்க



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

1) அல் இஜ்திஹாத் என்ற பதம் ஜஹ்த் (கஷ்டம்) ஜுஹ்த் (முயற்சி) என்ற வினையடியாலிருந்து தோன்றியது. மொழியில் கடு முயற்சியையும் செலவிடுவதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும்.

அல் குர்ஆன், அஸ்ஸுன்னா நேரடியாக தீர்வு குறிப்பிடாத ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஒரு சட்ட அறிஞன் மேற்கொள்ளும் அறிவியல் ரீதியான கடும் முயற்சியையே இஸ்லாமிய வழக்கில் இஜ்திஹாத் என்பர்.

2) <u>அல் குர்ஆன் ஆதாரம்</u>

* மேலும் அபயமோ, பாதுகாப்பைப் பற்றிய செய்தியோ அவர்களுக்கு எட்டுமானால் உடனே அவர்கள் அதனைப் பரப்பி விடுகிறார்கள். அவர்கள் அதைத் தூதரிடமோ அவர்களில் நின்றுமுள்ள அதிகாரிகளிடமோ தெரிவித்தால், அவர்களிலிருந்து அதை ஊகித்து அறியக்கூடியவர்கள், அதை நன்கு விசாரித்துத் தெரிந்து கொள்வார்கள் (4:83).

* (42: 38).

<u>ஹதீஸ் ஆதாரம்</u>

* ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 122 பார்க்க)

3) 1. முஜ்தஹித் முத்லக்
 அ) முஜ்தஹித் முஸ்தக்கில்
 ஆ) முஜ்தஹித் முன்தஸிப்
2. முஜ்தஹித் பில் மத்ஹப்
3. முஜ்தஹித் பில் பத்வா
(பார்க்க: ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டித் தரம் 12 பக்கம் 123 – 124).

4) பார்க்க: ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 126 – 135)
(பொருத்தமான விளக்கத்தினை போதுமானது)

1. அகம்பாவம்
2. பொறாமை
3. பேராசை
4. பொய்
5. கோள்
6. கர்வம்
7. தீய எண்ணம்
8. நயவஞ்சகம்
9. முகஸ்துதி
10. மனோ இச்சை
11. அவசரப் புத்தி
12. கோபம்
13. சுயநலம்

(இவற்றில் நான்கை பொருத்தமான விளக்கத்துடன் தெரிந்து கொள்ளும் வழிமுறைகளையும் விளக்கினால் பூரண புள்ளிகளை வழங்கலாம்).

பார்க்க: ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 13, பக்கம் 10 – 15).


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

3) 1) தஸவ்வுப் என்ற சொல் ஸபா என்ற வினையடியிலிருந்து தோன்றியது எனக் கூறுபவர்கள் " உள்ளத் தூய்மை படைத்தவர்", என்ற கருத்தில் ஸூபி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்கள். இன்னொரு சாரார் "ஸூப்" எனும் சொல்லான கம்பளி எனும் கருத்திலிருந்து தஸவ்வுப் என்ற சொல் தோன்றியுள்ளது எனக் கூறி கம்பளிப் போர்வையை அணிந்தவர் என்ற கருத்தில் ஸூபி எனும் சொல் தோற்றம் பெற்றதாக குறிப்பிடுகின்றனர்.

(பார்க்க: ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 13 பக்கம் 16)

2) <u>அல் குர்ஆன் ஆதாரம்</u>

\# ஸூரத்து தாஹா – 124
\# ஸூரத்து அஸ்ஸல்ஸலா 1 – 2
\# ஸூரத்து அஷ்ஷம்ஸ் 9 – 10
\# ஸூரத்துல் ஜும்ஆ 2

<u>அஸ் ஸுன்னா ஆதாரம்</u>

உடலில் ஒரு சதைத்துண்டு உண்டு. அது சீரடைந்தால் முழு உடலும் சீரடைந்து விடும். அது சீர்கெட்டால் முழு உடம்பும் சீர் கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள் அதுதான் உள்ளமாகும்.
(ஆதாரம் ஸஹீஹுல் புகாரி).

" யா அல்லாஹ் எமது உள்ளங்களுக்கு இறையச்சத்தைக் கொடுத்துவிடுவாயாக, அதனை நீ பரிசுத்தப் படுத்துவாயாக
(ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம்)

3) 1. அல் இஃக்லாஸ்
2. அத் தௌபா
3. அத் தக்வா
4. அல் வரஃ
5. அஸ் ஸுஹ்த்
6. அத் தவக்குல்
7. அல் மஹப்பத்
8. அர் ரிழா.

(இவற்றில் நான்கினை சுருக்கமாக விளக்கினால் போதுமானது)

(பார்க்க: ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 13, பக்கம் 4-10)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

4) i) 1) ஒரு குறிப்பிட்ட வார்த்தை உச்சரிப்பதில் உண்டாகும் கருத்து வேறுபாடு

2) சட்ட வாசகத்தை விளக்குவதில் ஏற்படும் கருத்து வேறுபாடு

3) முரண்பட்ட சட்ட வாசகங்களிடையே இணக்கம் காண்பதிலும் ஒன்றை உச்சரிப்பதிலும் ஏற்படும் வேறுபாடுகள்.

4) சட்டவாக்க நோக்கை விளக்குவதில் காணப்படும் கருத்து வேறுபாடுகள்.

5) பல கருத்துக்களைத் தரும் சட்ட வாசகங்கள் அல்லது [illegible] காணப்படுகின்றமை.

(பார்க்க: ஆசிரியர் அறிவுரைப் வழிகாட்டி தரம் 12 பக்கம் 167–169).

ii) 1) கருத்தொற்றுமையான விடயங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்தல்.

2) கருத்து வேறுபாடு கொண்ட விடயங்களில் விட்டுக் கொடுத்தல்

3) ஒருவரை யொருவர் சாடாதிருத்தல், மதித்து நடத்தல்.

4) ஒரு மதத்தவரின் அல்லது இனத்தவரின் கருத்துக்களில் பொதுவான போக்கை நோக்கல்.

5) அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளல்.

6) வாதங்களை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்ளல்

7) மார்க்கத்தைப் பின்பற்றுவதில் நடுநிலைப் போக்கைப் பின்பற்றல்

8) கலைச் சொற்களின் கருத்துக்களை அறிந்து பயன்படுத்தல்.

9) இக்திலாபுக்குரிய விடயங்களை அழுத்திச் சொல்வதைத் தவிர்த்தல் -

பார்க்க: ஆசிரியர் அறிவுரைப் வழிகாட்டி தரம் 12 பக்கம் 169–174)
(சுருக்கமாக விளக்கினால் போதுமானது)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

5) 1) i) வானங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. அவற்றை அவன் மனிதர்களுக்காகப் படைத்துள்ளான்.

ii) செல்வம் தொடர்பாக மனிதன் மறுமையில் விசாரிக்கப்படுவான்.

iii) தனிநபர் சொத்தில் சமூகத்துக்கும் பங்குண்டு.

iv) செல்வத்தைத் திரட்ட மனிதன் மேற்கொள்ளும் முயற்சி பலனளிப்பதும் பலனளிக்காதிருப்பதும் அல்லாஹ்வின் நாட்டத்தைப் பொறுத்தே.

v) செல்வம் மனிதனைச் சோதிக்க தரப்பட்டதாகும்

(பார்க்க: ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 13 பக்கம் 21 - 22)

2) i) அல்லாஹ்விடமிருந்து பெறப்பட்ட தெய்வீகத் தன்மை கொண்டது.

ii) சமகாலத்தில் நெகிழும் தன்மையும் நெகிழா தன்மையும் கொண்டு இயங்கும் பொருளாதார முறை.

iii) இயற்கைக்கும் மனித இயல்புக்கும் ஏற்ற பொருளாதார முறை

iv) சமூகத்திற்கும் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருளாதார முறை.

v) சமூக நலனுக்கும் தனிமனித நலனுக்கும் இடையில் இணக்கம் காணல்.

vi) சமநிலைத் தன்மை கொண்ட பொருளாதார முறை

vii) அல்லாஹ்வின் அருள் அபிவிருத்தி நீதியைக் கொண்டமைந்துள்ளமை.

viii) இஸ்லாமிய பொருளாதார நடவடிக்கைகள் இபாதத்தாக கருதப்படுகின்றமை.

ix) பரஸ்பரத்துவம் வாய்ந்தது.

(பார்க்க. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 13 பக்கம் - 23 - 27).

6) 1) i) சமூக நீதியான அரசு

ii) அரசுத் தன்மைக்கு எதிர்ப்பு செயல்கள்

iii) அரசுத் தன்மைக்கு உரிய உண்மைகள்

iv) சட்டவியல் நீதியான அரசு.

(பார்க்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 92 - 94).

2) 1. அத்தியவசிய நிலை : ழரூரிய்யாத்,
* தீனைப் பாதுகாத்தல்
* உயிரைப் பாதுகாத்தல்
* புத்தியைப் பாதுகாத்தல்
* பரம்பரையை பாதுகாத்தல்
* மானத்தைப் பாதுகாத்தல்
* செல்வத்தைப் பாதுகாத்தல்

2. தேவை நிலை :- ஹாஜிய்யாத்

3. ஆடம்பர நிலை :- தஹ்ஸீனிய்யாத் அல்லது தக்மீலிய்யாத்.

(பார்க்க: ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 159 - 161)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

7) 1) * முஃதஸிலாக்கள் வாஸில் பின் அதா 8
* இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்களின் பஸரா பள்ளிவாயல் வகுப்பிலிருந்து கருத்துவேறுபாட்டுடன் பிரிந்து சென்ற குழுவினர் -

<u>அவர்களின் ஆதாரக் கோட்பாடு</u>

1. தவ்ஹீத்
2. நீதி
3. இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை
4. வாக்குறுதியும் எச்சரிக்கையும்
5. நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் -

(பார்க்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 63-64)

2) பார்க்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 186

8) 1) நிபாக் என்பதன் கருத்தை "போலி" "நடிப்பு" என்பதாகும். நடிப்பு என்றால் போலியாக நடந்து கொள்ளுதல் ஆகும்.

= உள்ளத்தில் தீய எண்ணங்களை மறைத்து நல்லவன் போல் நடிப்பதைக் குறிக்கும்.

= இஸ்லாமிய பரிபாஷையில் உள்ளத்தில் குஃப்ரை மறைத்து ஈமானை போலியாக வெளிப்படுத்துவதைக் குறிக்கும்

* நிச்சயமாக முனாபிக்குகள் நரகத்தின் அடித்தளத்தில் இருப்பார்கள் (4: 145).

* நிபாக்கை அறிஞர்கள் பின்வருமாறு வகைப்படுத்தி உள்ளனர்.

1) நம்பிக்கை சார்ந்தது அமல் சார்ந்தது
(உதாரணம் இப்னுல் அரபி, இப்னு கஸீர்)

2) நிபாக்குல் கப்ர் நிபாக்குல் அமல்
(உதாரணம் இப்னு ரஜப் அல்ஹன்பலி)

3) மார்க்கத்திலிருந்து வெளியேற்றக் கூடிய பெரிய வகை நிபாக் மார்க்கத்திலிருந்து வெளியேற்றும் அளவு பாதகம் இல்லாத சிறிய வகை நிபாக்
(உதாரணம் இப்னு தைமியா, ஹாபிழ் இப்னு ரஜப்)

* பெரிய வகை நிபாக் சிறிய வகை நிபாக் என வகைப்படுத்தலே தெளிவானதாகும் -

(பார்க்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 48- 51)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

8) ii) கயிற் ரேய் கொம் முறைமைக் கழக இஸ்லாமிய அல் புகாரி.

= பொப்பு வீதி 194 கடல் புகாரா.

(பார்க்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 116 – 117)

iii) அணி பாதுகாப்பு நலன்

- அணியின் உறுப்பினர்கள் அமைக்கப்பட்டதற்கான பொறுப்பை உடையவர்கள்.
- அணியின் உறுப்பினர்கள் ஏன், எப்போது, அமைக்கப்பட்டன என்பதனை அறிவுறுத்தி ஒரு அணியின் கடமையாகும்.
- அணியினை வளர்க்க சுகாதார. ஒருவர் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய ஒரு கடமையாகும் -
- அணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பொறுப்புக் காரணம் கூற வேண்டியது அவசியமில்லை -

<u>உதாரணமாக.</u>

- ~~காயம்~~ ஸ்போர்ட்ஸ் அபச காயங்களுக்கான காரணம் -
- உங்களுடைய உடல்பயிற்சியாளர் போது ஸ்போர்ட்ஸ் பக்க காயங்கள்
- கடினமான (ஓடு) அவர்களுக்கு இடப்பட்டபோது இடம்பெற்ற போது ஸ்போர்ட்ஸ் நோய் காயங்கள் -
- மைதான வெற்றியின் போது ஸ்போர்ட்ஸ் நலம் -
- வேள்வர்களுக்கு பாடசாலை காயங்கள் -
  பாரம் தூக்கும்போது -
  - மதுபானம்
  செலவழித்தல் தொடர்பாக -

(பார்க்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 79-80)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

8) 14) சட்ட விதிகள் அல்லது பிக்ஹ் விதிகள்.

- அதிகமான கிளைச் சட்டங்களை உள்ளடக்கும் வகையில் அவற்றுடன் ஒத்துச் செல்கின்ற பெரும்பான்மைச் சட்டம் இஸ்லாமிய ஷரீஅவின் சட்ட விதிகள் என அழைக்கப்படுகின்றது.

- சட்ட விதிகள் அடிக்கடி ஏற்படக்கூடிய பொதுவானதாக உள்ள நிகழ்வுகளுக்குத் தீர்வு சொல்லும் வகையாகும் அமையப் பெற்றிருக்கும்.

- சட்ட விதிகள் எப்போதும் விதிவிலக்குகளையன்றி விதிகளையே பேசுகின்றன.

- இச்சட்ட விதிகள் பல முஜ்தஹிதுகள் அல் ஸஹாபாக்களால் இருந்தே தொகுக்கப்பட்டதாகும்.

- சட்ட விதிகளை முதன் முதலில் தொகுத்த பெருமை இமாம் ஷாபி மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களே.

- இமாம் அபூ தாஹிர் அத்பாஸ் என்பவரே ஹனபி மத்ஹப் சட்டங்களை 17 சட்ட விதிகளில் தொகுத்தார். அனைத்துப் பாடங்களுக்கும் உரிய சட்ட விதிகளில் நின்று தீர்வு கண்டார்.

* அனைத்து சட்ட அறிஞர்களும் உடன்படுகின்ற அடிப்படை அல்லது பொதுவான சட்ட விதிகள் ஐந்து

1. எந்தவொரு விடயமும் நோக்கத்தை வைத்தே அளவிடப்படுகின்றது.
2. உறுதி சந்தேகத்தால் நீக்கப்பட மாட்டாது.
3. கஷ்டம் இலகுவை வேண்டி நிற்கும்
4. தீங்கு அகற்றப்பட வேண்டும்
5. வழக்காறு சட்டமாக்க அந்தஸ்துடையது

(பார்க்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 12 பக்கம் 161 - 162)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

WWW.LOL.LK

# BUY

## PAST PAPERS

## 071 777 4440

Buy Online - www.LOL.lk

- GCE O/L
- GCE A/L
- PAST PAPERS
- SHORT NOTES




Protect Yourself From Coronavirus

# YOU STAY AT HOME




# WE DELIVER!

**ORDER NOW**

**075 699 9990**

**WWW.LOL.LK**

LOL.lk
Learn Ordinary Level

0

**TOP CATEGORIES**

- GCE O/L Exam NEW
- Grade 09, 10 & 11
- Grade 06, 07 & 08
- Grade 04 & 05
- Grade 01, 02 & 03
- About Us
- Shop HOT
- Cart

**HUGE SALE – SHOP NOW**




**ISLANDWIDE DELIVERY**
Free delivery on all orders over Rs. 3500

**More than 1000+ Papers**
For all major Subjects and mediums

**ONLINE SUPPORT 24/7**
Shopping Hotline 071 777 4440

## FEATURED PRODUCTS

**SORT BY**

- GCE O/L Exam




GCE O/L EXAM, SCIENCE
O/L Science Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART





GCE O/L EXAM, MUSIC
O/L Music Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, MATHEMATICS
O/L Mathematics Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, INFORMATION & COMMUNICATION TECHNOL...
O/L Information & Communication Tec...
රු 350.00




GCE O/L EXAM, HISTORY
O/L History Past Paper Book
රු 350.00




GCE O/L EXAM, HEALTH & PHYSICAL EDUCATION
O/L Health & Physical Education Past P...
රු 350.00